**வரையறுத்த களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலைகள் கம்பனி – 2018.்.2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலைகள் கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, இலாப நட்டக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை

| கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 74(ஏ) பந்தியின் பிரகாரம் பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 78,000,000 தொகையான தொழிற்படு மூலதன கடன் பெற்றுக் கொள்ளும் போது பிணையாக வைக்கப்பட்ட | அடுத்து வரும் ஆண்டின் போது சரிசெய்து பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை அமைந்துள்ள காணி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்ட ரூபா 1,000,000 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட தேயிலையை உலர்த்தும் இயந்திரத்தின் கிரயமும் திரண்ட பெறுமானத்தேய்வும் மீளாய்வாண்டின் இறுதிவரை கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த உலர்த்தும் இயந்திரத்தின் கிரயத்தை தேடிப்பார்ப்பதற்கு போதிய ஆவணங்கள் இல்லாததனால் அது நீக்கப்பட்டிருக்காததுடன் சொத்துக்களின் மீள் மதிப்பு இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளதனால் இப்பெறுமதி அதன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | விற்கப்பட்ட சொத்தின் கிரயத்தையும் திரண்ட பெறுமானத் தேய்வையும் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்திற்குச் சொந்தமான மெனிக்திவெல காணியில் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக கம்பனியால் செலவு செய்யப்பட்ட ரூபா 59,532,264 தொகை பெறவேண்டிய மீதியாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக அதற்கான பெறுமானத்தேய்விற்காக செம்மையாக்கல் செய்யப்பட்டிருந்தது. | தற்பொழுது உரிய தொழிற்சாலையை எங்களின் கம்பனிக்கு வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதால் அப்பணம் கம்பனியின் சொத்துக்களாக குறிப்பிடுவது சரியானதாகும். | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மெனித்திவெல தொழிற்சாலையை கம்பனிக்கு பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| 05 கடன்பட்டோர் | 7,135,440 | 5,812,772 | 1,332,668 | இந்த வித்தியாசம் Forbes | மீதிகளை ஒப்பீடு செய்து |

| | | | |
|---|---|---|---|
| கணக்குகளின் மீதி | | Walker நிறுவனத்தின் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்ட தேயிலைகளின் நிலுவை (Short Delivery) பெறுமதிகளில் மொத்த தொகையையும் மெனித்திவல தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகளுக்காக மேலதிமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் உள்ளடக்கியிருந்ததுடன் அவற்றினை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பீ.சீ.சீ லங்கா கம்பனிக்கு செலுத்த வேண்டிய வாடகை | 750,000 | வாடகை உடன்படிக்கை | ரூபா 750,000 செலுத்த வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் பீ.சீ.சீ லங்கா கம்பனிக்கும் எங்களுக்குமிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | குத்தகை அடிப்படையில் கட்டிடத்தைப் பெற்றுக் கொள்ளும் போது உரிய தரப்பினர்களுடன் செல்லுபடியான உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பசளைக் கம்பனி | 728,048 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதிகளை சரிசெய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தேயிலை விற்பனை நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 2,481,141 | விபரமான பட்டோலை | தேரங்கல மற்றும் ஹினிதும தொழிற்சாலை களிலிருந்து தேயிலை விற்பனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறையே ரூபா | கணக்குகளுக்குரிய பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 2,119,800 மற்றும் ரூபா 230,000 தொகைகள் 2019-03-31 ஆந் திகதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இத்தேயிலை இருப்புக்களை பொதி செய்ததன் பின்னர் சந்தைப்படுத்தல் பிரிவிற்கு அனுப்புவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது | |
| (ஈ) | கடன்பட்டோர் மீதி | 14,641,152 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளின் உறுதிப்படுத்தல் நேரடியாக கணக்காய்விற்குப் பிரிவிற்கு கிடைப்பதற்கு உரிய கடிதம் அந்த நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் உறுதிப்படுத்தல் களை கணக்காய்விற்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆண்டின் போது BCC லங்கா கம்பனிக்கு ரூபா 10,000,000 கடன் பணம் 22 சதவீத வட்டி விகிதத்தின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவிடும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒரு தவணைப் பணமும் அறவிடப்படாததன் பேரில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த பணம் ரூபா 52,910,605 ஆகும். | பீ.சீ.சீ லங்கா கம்பனிக்குச் சொந்தமான 06 ஏக்கர்கள் காணி சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தனால் அதன் பெறுமதி பீ.சீ.சீ இலங்கை கம்பனிக்கு கிடைத்த உடன் அந்த நிறுவனத்திற்கு அப்பணத்தை தீர்த்து வைப்பதற்கு அவர்கள் எழுத்து மூலம் ஒப்புக்கொண்டிருந்தார்கள். | கடன் பணத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.3.1(வீ) பந்தி | பதில் கடமைக்காக நியமிக்கப்பட வேண்டியதானது நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக அடிப்படையிலானதாக இருந்த போதிலும், கம்பனியின் தலைமை அலுவலகத்தின் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக நிரந்தர நியமனம் செய்யப்படாது 2017 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து ஒரு உத்தியோகத்தர் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். | செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக நிறுவனத்தின் ஒரு ஊழியர் பதில் கடமை அடிப்படையில் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவியில் ஈடுபட்டிருந்தார். நிகழ்காலத்தில் சந்தைப்படுததல் பிரிவில் சில செயல்முன்னேற்றம் அறிவிக்கப்பட்டுள்ளதனால் நிரந்தரமாக உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவியிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உரிய அங்கீகாரத்துடன் உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 9.14 ஆம் பந்தி | மனிதவளங்கள் முகாமைத்துவத்திற்கான சட்ட விதிகளை உருவாக்குவதற்குரிய செயல் நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | மனித வளங்கள் முகாமைத்துவத்திற்காக சட்ட விதிகளை உருவாக்குவதற்குரிய நடைமுறைக் கையேட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நடைமுறைக் கையேட்டினைத் தயாரித்து அதற்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ல. | | |
| (ஆ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை. | | | |
| (i) | 3.2.1 ஆம் பந்தி | கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்த எரிபொருள் படி போதியதாக இல்லாத விசேட சந்தர்ப்பங்களின் போது தலைவரால் மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட எரிபொருளுக்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் தலைவரால் அங்கீகரித்த எரிபொருள் எல்லையை மிகைத்து பயன்படுத்திய ரூபா 243,854 பெறுமதியான மேலதிக எரிபொருளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அமைச்சு செயலாளரின் 2016-10-12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்தல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இடம்பெறுதல் சம்பந்தமாக அமைச்சரின் எதிர்ப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க 2017-05-25 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஒரு மாதத்திற்கு 91 லீற்றர்கள் அளவான எரிபொருட்கள் மீளளிப்புச் செய்வதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேலதிகமாக வாகனங்கள் ஓடியதற்காக செலவு செய்யப்பட்ட எரிபொருளுக்குச் செலவு செய்யப்பட்ட பணம் மீளளிப்புச் செய்யப்பட்டது. | மாதாந்த அங்கீகரித்த எரிபொருள் எல்லைக்குள் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மேலதிக எரிபொருளுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 3.2.2 ஆம் பந்தி | நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக எரிபொருளை மீள்நிரப்பம் செய்வதற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், | இந்த எரிபொருளை மீளளிப்புச் செய்தலானது தலைவரின் அங்கீகாரத்துடனும் முகாமைத்துவ பணிப்பாளரின் அங்கீகாரத்துடனும் இடம்பெற்றுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் எல்லைக்குள் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டியதுடன் மேலதிக எரிபொருளுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 157,411 தொகையான மேலதிக எரிபொருளுக்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 387 | காசோலைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது தமது வங்கி மீதி போதுமானது என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டிய போதிலும், கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் வங்கி போதுமானது என உறுதிப்படுத்தப்படாது காசோலைகள் எழுதியதன் காரணமாக ஆண்டின் இறுதியின் போது ரூபா 81,708,981 தொகையான மேலதிகப் பற்று மீதிக்காக மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 12,168,970 பணத்தை செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டின் போது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் மற்றும் அமைச்சின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் தேயிலை சக்தி நிறுவனத்திற்கு வங்கி மேலதிகப்பற்றின் அடிப்படையில் ரூபா 50 மில்லியன் வழங்குதல் மற்றும் 100 நாட்கள் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மெனிக்திவெல தொழிற்சாலையை நிர்மாணித்தல் (ரூபா 76 மில்லியன்) ஆகிய விடயங்களின் காரணமாக நிறுவனத்தின் காசு மீதி வங்கி மேலதிகப் பற்றின் அடிப்படையில் ஏற்படுவதற்கு காரணமாக இருந்ததுடன் ஹினிதும ஹில்ஸ் மற்றும் மெனிக்திவெல தொழிற்சாலைகள் அடிக்கடி நட்டமடைவதன் காரணமாக அத்தொழிற்சாலைகளின் மூலம் மறைக் காசுப் போக்கு காணப்பட்டதன் காரணமாக அடிக்கடி காசு மீதியானது வங்கி மேலதிகப் பற்றின் அடிப்படையில் காணப்படுவதனைக் குறைப்பதற்கு முடியாதிருந்தது. | காசோலைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது கம்பனியின் மாதாந்த காசுப் பாய்ச்சல் திட்டத்தை தயாரித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,211,574 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,285,757 ஆகும். அதற்கிணங்க, நிதி விளைவுகளில் ரூபா 46,925,817 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானத்தை மிகைத்து விற்பனைக் கிரயம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய ஒரு அரசாங்க நிறுவனத்தின் முகாமைத்துவத்துவத்தராக நிரந்தரப் பதவியில் முழு நேர கடமையை மேற்கொண்டு அப் பதவிக்குரிய சம்பளமும் படிகளும் பெற்றுக்கொள்ளும் ஒரு உத்தியோகத்தர் இக் கம்பனியின் நிறைவேற்று பணிப்பாளராக நியமிக்கப்பட்டு முழு நேர நிறைவேற்றுப் பணிப்பாளருக்குரிய படிகள் மற்றம் எரிபொருள் படியாக ரூபா 718,825 தொகை கம்பனியால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | 2018 யூலை 19 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது 2018 யூலை 16 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தும் வகையில் நிறைவேற்றுப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கிணங்க PED3/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதவிக்குரிய படிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. 2019 ஏப்ரல் மாதத்திலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளரின் வாய்மொழி மூல வேண்டுதலின் அடிப்படையில் 50% மாதாந்தப்படி செலுத்தப்பட்டது. | ஏனைய ஒரு அரசாங்க நிறுவனத்தின் முழுநேர சேவையில் ஈடுபட்ட ஒரு உத்தியோகத்தரை நிறைவேற்றுப் பணிப்பாளர் பதவிக்கு நியமித்தலும் முழு நேர சம்பளம் வழங்குதலும் செய்திருத்தலும் வேண்டும். |
| (ஆ) விற்பனை செய்வதற்காக ஏலமிடுவதற்கு சமர்ப்பிப்பதற்கு முகவர் கம்பனிக்கு அனுப்பிவைத்த பூர்த்தியான தேயிலையின் பெறுமதியின் அடிப்படையில் அந்த கம்பனியிடமிருந்து ரூபா 93,679,116 தொகையினை கடனாகப் பெற்று ரூபா 938,922 தொகையினை வட்டியாக செலுத்தியிருந்ததும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | நிறுவனத்தின் காசுப்பாய்ச்சலைப் பேணுவதற்காக நிறுவனத்தின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இப்பணம் முகவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. பணிப்பாளர் சபைக் கூட்டம் ஒரு மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படுவதனால் அதனை பணிப்பாளர் | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கடனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ல. | சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு செலவு செய்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும். | |
| (இ) | உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக தகமைகள் பெற்றிருக்காத ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கு ஒரு வாகனம் வழங்கப்பட்டு எரிபொருளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 152,760 படி செலுத்தப்பட்டிருந்தது. | 2018-01-04 ஆந் திகதி தலைவரின் கையெழுத்துடனான கடிதத்தின் மூலம் இப்பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மெனிக்திவெல தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதல் தேயிலை கொழுந்துகளை பெற்றுக் கொள்வது சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல் போன்ற கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இக்கடமைகளுக்கான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கான மோட்டார் வாகனச் சேவை வழங்கப்பட்டுள்ளதுடன் கடமைச் செயற்பாடுகளுக்காக ஓடுவதற்காக ஓடிய தூரத்திற்கு இணங்க எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக தகமையற்ற உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்டுள்ள படிகளை அறவீடு செய்வவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 07 ஆந் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் நிதி ஆண்டின் போது நட்ட நிலைமை அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் அந்த நட்ட தன்மை பற்றி 2017 நிதி ஆண்டின் போது கழித்துக்கொள்வதற்கு முடியாதிருந்த கம்பனிகளில் சேவையாற்றிய ஊழியர்கள் தொடர்பாக தயவினை கருத்தில் கொண்டு ஒரு ஊழியருக்கு ரூபா 3,000 வீதம் ரூபா 252,000 தொகை மாத்திரம் மிகையூதியமாகச் செலுத்தக் கூடியதாக இருந்தும் அத்தொகையை மிகைத்து ரூபா | ஒட்டுமொத்த தேயிலை முறைமை வீச்சியடைந்துள்ளதன் அடிப்படையில் தேயிலைக் கைத்தொழிலின் இலாபத்தன்மை குறைவடைந்துள்ளது. எனவே ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டியிருந்ததனால் அவர்களின் பொருளாதாரப் பின்னணியை மேம்படுத்த வேண்டியிருந்ததனாலும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் இது செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மிகையூதியத்தினை ஊழியர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

559,719 மிகையூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மெனிக்திவெல தேயிலைத் தொழிற்சாலையின் உற்பத்தியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் உலர்த்தாத தேயிலைக் கொழுந்து மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு உலர்த்தாத தேயிலைக் கொழுந்து ஊக்குவிப்பு படியாக ரூபா 2,167,569 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்நிகழ்ச்சித் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலர்ந்ததாக தேயிலைக் கொழுந்துகளைக் கொள்வனவு செய்தல் 74,540 கிலோ கிராம்களால் குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உலர்த்தாத தேயிலைக் கொழுந்து ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தும் போதியளவு உயர்ந்த தரத்திலான வழங்குனர்களை தேடிக் கண்டுபிடித்தல் சிக்கலானதாக உள்ளது. இதன் காரணமாக 2019/2020 ஆண்டில் தேயிலைக் கொழுந்து படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடிய வகையில் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கினிதும தேயிலை தொழிற்சாலையின் உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துவதற்காக கம்பனியால் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு ரூபா 672,028 ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளைப் பெற்றுக் கொள்ளுதல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 349,704 கிலோ கிராம்களால் வீழ்ச்சியடைந்திருந்தும் அதற்காக தேவையான | சந்தையில் பூர்த்தியான தேயிலையின் விலை வீழ்ச்சியடைகின்ற காலத்தில் உற்பத்தியை குறைப்பதற்காக கொள்வனவு செய்த உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நிறுவனத்தின் நட்டம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், உயர்ந்த தரமான உலர்த்தாத தேயிலைக் | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது அதன் மூலம் கம்பனியின் எதிர்பார்த்த குறிக்கோள்கள் நிறைவேற்றப் படுகின்றது என்பதனை முகாமைத்துவம் கவனத்தித்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| நடைமுறைகள் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொழுந்துகளை கொள்வனவு செய்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளதனால் உயர்ந்த தரமான உலர்த்தாத தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வதற்காக ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்பட்டுள்ளது. |